(எட்டாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

இல. 22.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2018 யூலை 18 புதன்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

22/ '18

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் உள்ள மாகாணப் பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்தப் பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அந்த ஒவ்வொரு பாடசாலையிலும் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) அந்தப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(v) கண்டி மாவட்டத்தில் நிலவும் மேலே (iv) இல் குறிப்பிடப்பட்ட ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

2.

136/ '18

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய மாகாணசபைக்குச் சொந்தமான மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள நீர்ப்பாசன திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நீர்ப்பாசன திட்டங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நீர்ப்பாசன திட்டத்திலிருந்தும் பயன்பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு நீர்ப்பாசன திட்டத்தின் மூலமும் பயிர்செய்கை மேற்கொள்ளப்படுகின்ற காணிகளின் ஏக்கர் அளவு தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(v) 2010 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை மத்திய மாகாணசபையினால் மாத்தளை மாவட்டத்தில் நீர்ப்பாசன அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செலவிடப் பட்டுள்ள பணத்தொகை வருடவாரியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

192/ '18

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2014 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதத்தில் திருகோணமலை மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் வெள்ளப்பெருக்கு நிலைமை காரணமாக கிண்ணியா பிரதேசத்தில் குறிஞ்சாக்கேணி பாலம் அழிவடைந்ததென்பதையும்;

(ii) இற்றைவரை இப்பாலம் முழுமையாக மறுசீரமைக்கப்படாது, தற்காலிகமாக மறுசீரமைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) நாளாந்தம் பெரும் எண்ணிக்கையான மக்கள் பயன்படுத்துகின்ற இப்பாலத்தை மறுசீரமைக்க அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது;

(ii) இற்றைவரை இப்பாலத்தை மறுசீரமைக்காதிருந்தமைக்கான காரணம் யாது;

(iii) இப்பாலத்தை இயலுமான விரைவில் மறுசீரமைக்க நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

236/ '18

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மீதொட்டமுல்லைக்கு மேலதிகமாக, உள்ளூராட்சி மன்றங்களினால் அகற்றப்பட்டு தற்போது உருவாகியுள்ள குப்பை மேடுகள் யாவை என்பதையும்;

(ii) அவை உரித்தான உள்ளூராட்சி மன்றங்கள் யாவை என்பதையும்;

(iii) தற்போது மேற்படி குப்பை மேடுகளில் காணப்படுகின்ற குப்பைகளின் அளவு யாது என்பதையும்;

(iv) இவற்றில் தற்போது ஆபத்தான நிலையில் காணப்படுகின்ற குப்பை மேடுகள் உள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவ்வாறான குப்பை மேடுகளுக்கு மென்மேலும் குப்பைகளை அகற்றி அவை வளர்ச்சியடைவதற்கு நடவடிக்கையெடுக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்காக உள்ளூராட்சி அமைச்சின் கீழ் ஏதேனுமொரு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் முதலீடுகளைப் பெற்றுக் கொள்ளும் வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அவை யாவை என்பதையும்;

(v) தற்போது ஏதேனும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பின், அதன் முன்னேற்றம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

385/ '18

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிராமிய பாடசாலைகளின் கல்வியில் வளர்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும், பெருந்தோட்டங்களில் வாழ்கின்ற மக்களின் பிள்ளைகளின் கல்வி வீழ்ச்சியடைந்துள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) 2010 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை பெருந்தோட்டப் பாடசாலைகளை மேம்படுத்துவதற்காக கடந்த அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) அதற்காக எவ்வளவு பணம் செலவிடப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) அதற்காக அக்காலப்பகுதியினுள் ஆட்சேர்க்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) 2015 ஆம் ஆண்டின் சனவரி முதல் இற்றைவரை அரசாங்கம் பெருந்தோட்டப் பாடசாலைகளுக்காக செலவிட்டுள்ள பணத் தொகை மற்றும் ஆட்சேர்க்கப் பட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை கண்டி, நுவரெலிய, பதுளை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கமைய தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

419/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிமிக்க இடங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி இடங்களில் தற்போது பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற இடங்கள் யாவை;

(iii) இதற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(iv) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளால் அழிக்கப்பட்ட தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிமிக்க இடங்கள் யாவை;

(v) மேற்படி அழிவுகள் பற்றிய மதிப்பீடொன்று செய்யப்பட்டிருப்பின், மதிப்பீட்டுப் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு;

(vi) மேற்படி அழிவுகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(vii) மேற்படி அனைத்தினதும் முழுமையானதோர் அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

443/ '18

கௌரவ ஜயந்த சமரவீர,— பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மண்ணெண்ணெய் இறக்குமதியின்போது ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்க்கு அரசாங்கம் அறவிடுகின்ற இறக்குமதி வரி எவ்வளவு என்பதையும்;

(ii) மண்ணெண்ணெய்க்கு அரசாங்கம் இறக்குமதி வரி தவிர வேறு வரிகளை அறவிடுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி வரி வகைகள் யாவை என்பதையும்;

(iv) ஒரு லீற்றருக்கு அறவிடப்படுகின்ற வரித் தொகை, ஒவ்வொரு வரி வகைக்கும் அமைய எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்க்கு அரசாங்கம் அறவிடுகின்ற மொத்த வரித் தொகையானது, ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் சில்லறை விற்பனை விலையில் எத்தனை சதவீதமாகும் என்பதையும்;

(ii) மண்ணெண்ணெய்க்கு அரசாங்கம் அறவிடுகின்ற சகல வரிகளையும் நீக்கும் பட்சத்தில், வாடிக்கையாளருக்கு ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்யை பெற்றுக் கொடுக்கக்கூடிய சில்லறை விலை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

476/ ’18

கௌரவ விமலவீர திசாநாயக்க,— நிதி மற்றும் வெகுசனஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபைச் சட்டத்தின்படி மதுபானம் மற்றும் புகை பிடித்தல் காட்சிகளைக்கொண்ட தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் அல்லது விளம்பரப் பிரசாரங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், வெகுசன ஊடக அமைச்சினால் நிருவகிக்கப்படும் சுயாதீன தொலைக்காட்சி அலைவரிசையில் 2017.02.11 ஆம் திகதி பி.ப. 7.30 க்கும் 8.00 மணிக்கும் இடையில் ஒளிபரப்பப்பட்ட “சுவேத்த கங்தீர” தொலைக்காட்சி நாடகத்தின் ஒரு காட்சியில் ஒரு நடிகை புகை பிடிப்பது தெளிவாகக் காட்சிப்படுத்தப்பட்டது என்பதையும்;

(ii) குறிப்பாக, ஒரு பெண் புகைப்பிடிக்கின்ற காட்சி ஒளிபரப்பப்படுவதன் காரணமாக இது புகைபிடித்தலுக்கு ஊக்குவிப்பாக அமையலாம் என்பதையும்;

(iii) பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்ட ஏற்பாடுகள் அரச வெகுசன ஊடக நிறுவனமொன்றினால் மீறப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இந்த ஒளிபரப்பு தொடர்பாக முறைசார்ந்த விசாரணையொன்றை நடாத்தி இனிமேல் இவ்வாறான சம்பவங்களைத் தவிர்க்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

9.

478/ ’18

கௌரவ எஸ். சீ. முத்துகுமாரண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 ஆம் ஆண்டின் சிறு போகம் தொடக்கம் உர மானியம் வழங்கும் போது மேற்படி மானியம் ஆரம்பத்தில் வழங்கும் போது பின்பற்றப்பட்ட முறையே மீண்டும் பின்பற்றப்படுமா என்பதையும்;

(ii) அதற்கமைய, நெற் பயிர்ச் செய்கையாளருக்கு ஓர் ஏக்கருக்காக வழங்கப்படும் உரத்தின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) ஒவ்வொரு செய்கைக்காக வழங்கப்படும் உர மானியத்தின் அளவு மட்டுப்படுத்தப்படுமா என்பதையும்;

(iv) மேற்படி உரமானியம் வேறு பயிர்களுக்காகவும் வழங்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

495/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் கட்டுப்பாட்டின் கீழ் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பஸ் வண்டிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இன்றளவில் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையில் கடமையாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) அங்கு இன்றளவில் கடமையாற்றும் அலுவலர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) ஊவா மாகாணத்தின் தற்போதைய முதலமைச்சர் அப்பதவிக்குத் நியமிக்கப்பட்டதன் பின்னர், இற்றைவரை குறித்த அதிகாரசபையில் வழங்கப்பட்டுள்ள தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை மற்றும் அந்த தொழில்பெறுநர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(v) தற்போதைய முதலமைச்சர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் வழங்கியுள்ள பஸ் வண்டி அனுமதிப்பத்திரங்கள் (Permits) மற்றும் அந்த அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள வீதிகள் மற்றும் நபர்களின் பெயர்கள் தனித்தனியாக யாது என்பதையும்;

(vi) அதற்கென பின்பற்றப்பட்ட முறையியல் யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

555/ '18

கௌரவ அசோக்க பிரியந்த,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்திலுள்ள தமிழ் மொழிப் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் யாவை;

(iii) தற்போது ஒவ்வொரு பாடசாலையிலும் சேவையாற்றி வரும் ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது;

(iv) புத்தளம் மாவட்டத்திலுள்ள தமிழ் மொழிப் பாடசாலைகளில் பாரிய ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது என்பதை ஏற்றுக்கெள்வாரா;

(v) ஆமெனில், மேற்படி ஆசிரியர் பற்றாக்குறையைக் குறைப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

574/ '18

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறுநீரக நோய் பரவி வருகின்ற குருநாகல் மாவட்டத்தில், சிறுநீரக நோயாளர்களுக்கு தமது மருந்துகளுக்காக அதிகளவு பணத்தை செலவிட நேரிட்டுள்ளதால், இவர்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கும், இவர்களால் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீடுகளின் வேலைகளை நிறைவு செய்வதற்கும் அமைச்சு ஏதேனும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், உதவி பெற்ற ஆட்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கமைய யாது என்பதையும்;

(iii) எதிர்வரும் காலத்தில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை மாவட்டம் பூராகவும் விஸ்தரிப்பதற்கு அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

595/ ' 18

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் பரவியுள்ள சிறுநீரக நோய் நிலைமையை இனங்காண்டுகொள்வது தொடர்பில் தற்போது இடம்பெற்று வருகின்ற ஆய்வுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவ் ஆய்வுகளை மேற்கொண்டுவருகின்ற நிறுவனங்களினதும் ஆய்வாளர்களினதும் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஆய்வுகளின் தீர்மானங்கள் கிடைக்கப்படவுள்ள திகதி யாதென்பதையும்;

(iv) குறிப்பிட்ட ஆய்வுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்படுகின்ற சிகிச்சைகளுக்கு மேலதிகமாக இந்நோய் ஏற்படுவதனைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாதென்பதையும்;

(ii) வடித்த நீரை உற்பத்தி செய்கின்ற Reverse Osmosis Plant களுக்கு மேலதிகமாக பிரித்தானியாவில் அமைந்துள்ள ICON LIFE SAVER எனும் நிறுவனத்தின் ஒரு உற்பத்தியாகக் கூறப்படுகின்ற LIFE SAVER எனும் நீர் வடியொன்று இந்நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) சிறுநீரக நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கு அதனை ஏன் பயன்படுத்த முடியாது என்பது தெளிவுபடுத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

14.

608/ ’18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சமூக வலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் சமுர்த்தி வங்கி வசமுள்ள சொத்துக்களின் அளவு யாது என்பதையும்;

(ii) நாடெங்கிலுமுள்ள சமுர்த்தி வங்கிக் கிளைகள் மற்றும் சமுர்த்தி மகா சங்கங்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) இன்றளவில் அனைத்து சமுர்த்தி சங்கங்கள் வசமுள்ள சொத்துக்களின் அளவு யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2018 மே தினக் கொண்டாட்டத்தின் போது பிரதம அமைச்சர் குறிப்பிட்டதன்படி, சமுர்த்தி (வாழ்வின் எழுச்சி) வங்கி இலங்கை மத்திய வங்கியின் கீழ் கொண்டு வரப்படுமா என்பதையும்;

(ii) 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சிச் சட்டத்தின்படி, இலங்கை மத்திய வங்கியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள மேற்படி வங்கியை மீண்டும் பொறுப்பேற்பதற்கு வாய்ப்பு உள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறு பொறுப்பேற்கப்படின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

15.

960/ ’18

கௌரவ மயந்த திசாநாயக்க,— விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மலைநாட்டுப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட மலைநாட்டுக் கிராமிய புனர்வாழ்வளிப்புத் திணைக்களம் கடந்த அரசாங்கத்தினால் ஒழிக்கப்பட்டமை காரணமாக மலைநாட்டுப் பிரதேச மக்களுக்கு அநீதி நேர்ந்துள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா?

(ஆ) (i) மலைநாட்டு அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் மலைநாட்டுப் பிரதேசத்திற்கு உரித்தான அபிவிருத்தி நன்மைகள் யாவை;

(ii) மேற்படி அதிகாரசபைக்கு ஒதுக்கிய பணத்தொகை எவ்வளவு;

(iii) மேற்படி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் அமுலாக்கப்பட்ட கருத்திட்டங்கள் யாவை ;

(iv) மலைநாட்டு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமைத்துவம் மற்றும் தாபனப் பொறுப்பினை வகிக்கின்ற ஆட்கள் யார் ;

(v) மலைநாட்டு அபிவிருத்தி அதிகாரசபை மூலமாக மலைநாட்டுப் பிரதேசத்தின் வறிய கிராமங்களின் மக்களுக்கு வழங்கிய தொழில்கள் மற்றும் தொழில்களின் எண்ணிக்கை யாது;

(vi) மலைநாட்டு அபிவிருத்தி அதிகாரசபையினால் வறிய கிராமங்ளைச் சேர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு, மற்றும் கருத்திட்டங்களின் பெயர்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மலைநாட்டுக் கிராமிய புனர்வாழ்வளிப்புத் திணைக்களத்தை மீண்டும் ஆரம்பிக்க கருதியுள்ளாரா;

(ii) ஆமெனில், அத்திகதி யாது ;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— அமரதேவ அழகியல் மற்றும் ஆராய்ச்சி நிலையம்,— இலங்கையின் புகழ்பெற்ற இசைவல்லுனர், காலஞ்சென்ற பண்டித் வன்னகுவத்தவடுகே டொன் அமரதேவவிற்கு நன்றி செலுத்தும் வகையில் "அமரதேவ அழகியல் மற்றும் ஆராய்ச்சி நிலையம்" என அழைக்கப்படும் அழகியல் மற்றும் ஆராய்ச்சி நிலையமொன்றைத் தாபித்தலை ஏற்பாடுசெய்வதற்கும்; அதன் குறிக்கோள்களையும் தத்துவங்களையும் குறித்துரைப்பதற்கும்; அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

2.

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர்,— பெருந்தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை,— இலங்கையின் பெருந்தோட்டப் பிராந்தியத்தில் புதிய கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்குப் பெருந்தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை எனவழைக்கப்படவேண்டியதும் அறியப்படுவதுமான அதிகாரசபையொன்றைத் தாபிப்பதற்காகவும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்காகவும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலம் — குழு ஆய்நிலை.

* 4.

இலஞ்சம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 59 ஆம் மற்றும் 63 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 (2) ஆம் பிரிவின் (ப) என்னும் பந்தியின் கீழ் 2017 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மருந்துகளைப் பதிவுசெய்தலும் அவற்றுக்கு உரிமமளித்தலும் (கட்டணங்கள்) ஒழுங்குவிதிகள் தொடர்பில் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 சனவரி 05 ஆம் திகதிய 2052/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.04.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 7.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.1),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 25 ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 சனவரி 18 ஆம் திகதிய 2054/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 04/2018)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.2),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வருடாந்த மதுபான உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 திசெம்பர் 11 ஆம் திகதிய 2049/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 1004)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (190 ஆவது அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் தபால் கட்டணங்கள் தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூன் 07 ஆம் திகதிய 2074/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— பத்தொன்பதாவது அரசியலமைப்புத் திருத்தத்தின் ஊடாக திருத்தப்பட்டவாறான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41ஆ உறுப்புரையின் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்பது சுயாதீன ஆணைக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு தற்பொழுது செலுத்தப்படும் சம்பளங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை 2018.06.01 ஆம் திகதி முதல் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் திருத்தியமைத்துச் செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாலும் :—

(அ) பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் தலைவர்கள் தவிர ஏனைய தலைவர்களுக்கு தற்போது செலுத்தப்படும் ரூபா 100,000/- மாதாந்தக் கொடுப்பனவை ரூபா 135,000/- வரை அதிகரித்தல் மற்றும் இந்தக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக தற்போது செலுத்தப்படும் ஏனைய கொடுப்பனவுகளை திருத்தியமைக்காமல் அவ்வாறே செலுத்துவதற்கும்;

(ஆ) பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் சுயாதீன ஆணைக்குழுத் தலைவர்களுக்கு தமது நிரந்தரப் பதவிக்குரிய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக, சுயாதீன ஆணைக்குழுத் தலைவர் ஒருவரின் மாதாந்த கொடுப்பனவின் 50% இனை மாதாந்தக் கொடுப்பனவாகச் செலுத்துவதற்கும்;

(இ) இலஞ்சம் அல்லது ஊழல் குற்றப் புலனாய்வு ஆணைக்குழு தவிர ஏனைய சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படாத உறுப்பினர்களுக்கு தற்போது செலுத்தப்படும் ரூபா 75,000/- மாதாந்தக் கொடுப்பனவை ரூபா 90,000/- வரை அதிகரித்தல் மற்றும் இந்தக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக தற்போது செலுத்தப்படும் ஏனைய கொடுப்பனவுகளை திருத்தியமைக்காமல் அவ்வாறே செலுத்துவதற்கும்;

(ஈ) 2015.06.17 ஆம் திகதிய 3/2015 ஆம் இலக்க அரசாங்க பொறுப்புமுயற்சிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவருக்கு ஒரு கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக செலுத்தப்படும் ரூபா 10,000/- கொடுப்பனவை அவ்வாறே செலுத்துவதற்கும்;

(உ) 1994 இன் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் குற்றப் புலனாய்வு ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் வாசகத்திற்கமைய அந்த ஆணைக்குழுவின் தலைவருக்கும் இணையான வகையில் உறுப்பினர்களுக்கும் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளதனால் அந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு தற்போது செலுத்தப்படும் ரூபா 95,000/- மாதாந்தக் கொடுப்பனவை ரூபா 130,000/- வரை அதிகரித்தல் மற்றும் தற்போது செலுத்தப்படும் ஏனைய கொடுப்பனவுகளை திருத்தியமைக்காமல் அவ்வாறே மேலும் செலுத்துவதற்கும்; மற்றும்

(ஊ) தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு, தேர்தலொன்றுக்கான அறிவித்தல் விடுக்கப்பட்ட திகதி முதல் பெறுபேறுகள் வெளியிடப்படும் திகதி வரையிலான காலப் பகுதிக்காக அவர்களது மாதாந்தக் கொடுப்பனவின் ¾ இனை விசேட கொடுப்பனவாகச் செலுத்துவதற்கும்

அதற்கமைய, அரசியலமைப்பின் 41ஆ உறுப்புரையின் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்பது சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் சம்பளங்களையும் ஏனைய கொடுப்பனவுகளையும் செலுத்துவதற்கு பாராளுமன்றம் பிரேரணை நிறேவேற்றுமாக.

* 11.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலைய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

பிணையங்கள் பரிவர்த்தனை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

பிரதேச சபைகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

விசாரணை ஆணைக்குழுக்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

இருப்பிடக்கூறு சொத்தாண்மை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— மாகாண சபைகளின் தேர்தல் தொகுதி எல்லைகளை நிர்ணயிப்பதற்கான குழுவின் அறிக்கை,— 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 3அ. (11) ஆம் பிரிவின் பிரகாரம் எல்லை நிர்ணயக் குழுவினால் அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட்டு 2018.03.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுமான அக்குழுவின் அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

* 20.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) உறுப்புரையின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டு 2017 திசெம்பர் 04 ஆம் திகதிய 2048/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 21.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153 உறுப்புரையின் பிரகாரம், சனாதிபதி அவர்களால் அரசியலமைப்புச் சபையின் விதப்புரைக்கமைய 2015.11.27 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்கள் கணக்காய்வாளர் தலைமையதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாதலாலும்;

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் சம்பளம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம், பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டு அரசாங்க திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்பட வேண்டியுள்ளதாதலாலும்;

சனாதிபதியவர்களினால் 2017.11.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை நிருபத்திற்கான 2017.12.05 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய கணக்காய்வாளர் தலைமையதிபதி, திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்களுக்கு பின்வருமாறு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாதலாலும்:—

(அ) 2015.11.27 ஆம் திகதி முதல் அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 இற்கமைய SL - 4 சம்பள அளவுத்திட்டத்தின் 08 ஆவது படிநிலையில் இருத்தி சம்பளத்தைச் செலுத்தல் மற்றும் பதவிக்குரித்தான ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கும்;

(ஆ) அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 3/2016 இற்கமைய 2016.01.01 ஆம் திகதி முதல் சம்பளத்தை மாற்றியமைக்கும்போது SL - 4 சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் அச்சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் சம்பளத்தை மாற்றியமைத்துச் செலுத்துவதற்கும்; மற்றும்

(இ) அச்சம்பள அளவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் வருடாந்த சம்பள ஏற்றத்தைச் செலுத்துவதற்கும்.

அதற்கேற்ப, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம், கணக்காய்வாளர் தலைமையதிபதி, திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்களுக்கு அரசாங்கத் திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்படுமாறு மேலே குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

* 22.

அரச தொழில்முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர்,— மக்கள் வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2016),— பணச் சட்டத்தின் 35(3) பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2017.11.16 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான மக்கள் வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2018.03.06 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 23.

அரச தொழில்முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2017.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2018.03.06 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 24.

அரச தொழில்முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2016),— பணச் சட்டத்தின் 35(3) பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2017.12.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான இலங்கை வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2018.03.06 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 25.

அரச தொழில்முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர்,— பிரதேச அபிவிருத்தி வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2015),— பணச் சட்டத்தின் 35(3) பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2017.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான பிரதேச அபிவிருத்தி வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2018.03.06 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 26.

அரச தொழில்முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர்,— அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் (2014),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2017.06.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.09.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 27.

அரச தொழில்முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர்,— அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2017.11.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2018.03.06 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 28.

அரச தொழில்முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை சேமிப்பு வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் (2014),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2017.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட சுயாதீன கணக்காய்வாளர்களின் அவதானிப்பு உள்ளடங்கலான இலங்கை சேமிப்பு வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.09.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 29.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் (2012),— 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 31 வது வாசகத்தின் கீழ் 2017.10.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2012.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.11.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 30.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2013),— 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 31 வது வாசகத்தின் கீழ் 2017.12.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2018.03.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 31.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2014),— 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 31 வது வாசகத்தின் கீழ் 2017.12.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2018.03.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 32.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2014),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II ஆம் பிரிவு ஆகியவற்றின் கீழ் 2017.10.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2018.02.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 33.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் 2016 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள்,— இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவிற்கான 1987 இன் 36 ஆம் இலக்கச் சட்டத்தின் 37(2) பிரிவின் பிரகாரம், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(1) பிரிவின் கீழ் 2017.12.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலாக தயாரிக்கப்பட்ட இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2018.02.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 34.

விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர்,— ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகாரச் சபையின் வருடாந்த அறிக்கை (2014),— 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகாரச் சபைச் சட்டத்தின் 29(5) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2016.08.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டு 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகாரச் சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.11 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 35.

விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர்,— தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை (2013),— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரமும் 2016.06.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டு 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.11 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 36.

விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர்,— தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை (2013),— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரமும் 2016.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.11 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 37.

விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர்,— தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை (2014),— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கமையவும் 2017.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்கான தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.11 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 38.

விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை (2014),— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2017.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.11 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 39.

விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை (2013),— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2016.01.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.11 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 40.

விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர்,— இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை (2014),— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கை கட்டளைகள் நிறுவனச் சட்டத்தின் 37(3) ஆம் பிரிவிற்கமையவும் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கமையவும் 2016.12.02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.11 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 41.

விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர்,— ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகாரச் சபையின் வருடாந்த அறிக்கை (2015),— 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகாரச் சபைச் சட்டத்தின் 29(5) ஆம் பிரிவிற்கமையவும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2017.06.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகாரச் சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.11 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 42.

உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை (2013),— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் xiii (110) ஆம் பிரிவிற்கமைய 2017.10.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்கா தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 43.

உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2014),— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் xiii (110) ஆம் பிரிவிற்கமைய 2017.10.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 44.

உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் xiii (110) ஆம் பிரிவிற்கமைய 2017.10.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 45.

உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2013),— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் xiii (110) ஆம் பிரிவிற்கமைய 2017.03.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 46.

உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2014),— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் xiii (110) ஆம் பிரிவிற்கமைய 2017.08.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 47.

உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2013),— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் xiii (110) ஆம் பிரிவிற்கமைய 2016.10.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 48.

உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2014),— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் xiii (110) ஆம் பிரிவிற்கமைய 2017.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 49.

உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் xiii (110) ஆம் பிரிவிற்கமைய 2018.02.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2018.05.23 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 50.

உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணினி கற்கை நிறுவனத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2013),— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 110 ஆம் பிரிவிற்கமைய 2016.07.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணினி கற்கை நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 51.

உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணினி கற்கை நிறுவனத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2014),— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 110 ஆம் பிரிவிற்கமைய 2017.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணினி கற்கை நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 52.

உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2012),— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 110 ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II ஆம் பிரிவிற்கமையவும் 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2012.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.11.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 53.

உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2013),— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 110 ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II ஆம் பிரிவிற்கமையவும் 2017.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.11.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 54.

உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2014),— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 110 ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் II ஆம் பிரிவிற்கமையவும் 2017.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.11.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 55.

உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— கம்பஹா விக்கிரமாராச்சி கல்வி நிறுவனம், களனி பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2013),— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் xiii (110) ஆம் பிரிவிற்கமைய 2017.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான கம்பஹா விக்கிரமாராச்சி கல்வி நிறுவனம், களனி பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 56.

உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— கொழும்புப் பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2014),— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் xiii (110) ஆம் பிரிவிற்கமைய 2017.08.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான கொழும்புப் பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 57.

உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— முகாமைத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2013),— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் xiii (110) ஆம் பிரிவிற்கமைய 2017.03.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான முகாமைத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 58.

உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— முகாமைத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2014),— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் xiii (110) ஆம் பிரிவிற்கமைய 2017.03.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான முகாமைத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 59.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— “இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

60.

இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

61.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

62.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

63.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

64.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

65.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

66.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

67.

ஆலோகா சமூக சேவை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

68.

த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

69.

ஸ்ரீ சாக்கியசிங்காராம விகாரஸ்த கார்யசாதக சங்விதான (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.